TNTS040003302024

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், பி.ஏ., பி.எல்.,**
**செயலாளர், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**கூடுதல் சார்பு நீதிபதி, தென்காசி (முழு கூடுதல் பொறுப்பு)**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 04–ஆம் நாள்)**

**<u>அசல் வழக்கு எண்.233/2022</u>**
(CNR No. TNTS04-000330-2024)

1. கிருஷ்ணம்மாள்
2. செல்வி
3. சந்திரன் . . . வாதிகள்

/எதிர்/

1. இசக்கியம்மாள்
2. S. மாரியம்மாள்
3. பானுமதி . . . பிரதிவாதிகள்

இந்த வழக்கானது, முதலில் தென்காசி, முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அங்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டபின், மாண்புமிகு தென்காசி, முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களால் 10.04.2024 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட A.No.75/2024–ன் உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக மாற்றம் செய்யப்பட்டு, அதன்பின் கடந்த 18.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:25 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர். P. ராதாகிருஷ்ணன் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. D. ராதிகா அவர்களும் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்துவந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீ ர் ப் பு ரை

வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய மூன்றில் இரண்டு பங்கை பொறுத்து, நயமிதம் பார்த்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும் வகைக்கு பாகப்பிரிவினைக்கான ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், வாதிகள் இந்த வழக்கை உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், கட்டளை 7, விதி 1 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **வழக்குரையின் சுருக்கம்** :–

2.1 வழக்கு சொத்துக்களும், வேறு சொத்துக்களும், 2 ஆம் வாதியின் தாத்தா கிருஷ்ணன் மற்றும் 2 ஆம் வாதியின் பாட்டி திருமலையம்மாள் ஆகியோர்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறையினரால் இலவச வீட்டுமனை திட்டத்தின்கீழ் பட்டா எண்.46, மனை எண்.264 நம்பராக அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்ட சுயார்ஜித சொத்தாகும். வழக்குச் சொத்துக்களை மேற்படி இருவரும் அனுபவித்து வந்த நிலையில், மேற்படி கிருஷ்ணன் கடந்த 06.04.1992 தேதியிலும், திருமலையம்மாள் கடந்த 08.01.2003 தேதியிலும் யாதொரு ஆவணமும் பிறப்பித்து வைக்காமல் காலஞ்சென்றுவிட்டனர். மேற்படியார்களுக்கு 2 ஆம் வாதியின் தாயார் கருப்பம்மாள், கோபால், 1 ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். மேற்படி கிருஷ்ணனின் மகன் கோபால் என்பவருக்கு முதலில் 1 ஆம் வாதியை திருமணம் செய்து குழந்தைகள் எதுவும் இல்லாததால், 2 ஆம் வாதியை இரண்டாம் தாரமாக திருமணம் செய்துள்ளார். மேற்படி கோபால் மற்றும் 2 ஆம் வாதிக்கு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:32 +0530

3 ஆம் வாதி சட்டப்படியான வாரிசாவார். இந்நிலையில் மேற்படி கோபால் கடந்த 19.11.2021 தேதியில் இறந்துபோய்விட்டார். தற்போதுவரை வழக்குச் சொத்துக்கள் யாதொரு பாகப்பிரிவினையும் செய்யப்படாமல் காலியிடமாக இருந்து வருவதால், பொதுவாக அனுபவிக்கப்பட்டு வருகிறது.

2.2 வழக்குச் சொத்தினைப் பொறுத்து மேற்படி கிருஷ்ணன்–திருமலையம்மாளின் வாரிசான 2 ஆம் வாதியின் தாயார் கருப்பம்மாளுக்கு 1 பங்கும், 2 ஆம் வாதியின் கணவர் கோபாலுக்கு 1 பங்கும், மேற்படி 1 ஆம் பிரதிவாதிக்கு 1 பங்கும் ஆக, தலா 1/3 பாத்தியப்படக்கூடியதாக உள்ளது. மேலும், 2 ஆம் வாதியின் தாயார் கருப்பம்மாள் சுமார் 28 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார். மேற்படி கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், 2 ஆம் வாதி, மாணிக்கம் ஆகிய மூன்று பெண் குழந்தைகள் பிறந்தனர். 2 ஆம் வாதியின் மூத்த சகோதரி ஆறுமுகம் சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போய்விட்டார். அவருக்கு வாரிசு எதுவும் கிடையாது. அவர் உயிரோடு உள்ளாரா? இல்லையா? என்ற விபரம் தெரியவில்லை. அதுபோல், 2 ஆம் வாதியின் இளைய சகோதரி மாணிக்கம் 1.1/2 வயது குழந்தையாக இருக்கும்போது பராமரிக்க ஆள் இல்லாததால் அனாதை ஆஸ்ரமத்தில் சேர்க்கப்பட்டு, மேற்படியார் வெளியூரில் வசித்து வருகிறார். அவருடைய முகவரியும் தெரியவில்லை. மேற்படி இருவருக்குரிய பங்கு பாகத்தை பிரித்துத் தர வாதிகள் தயாராக உள்ளனர்.

2.3 இந்நிலையில், 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் வாதியின் தாயார் மற்றும் 2 ஆம் வாதியின் கணவர் ஆகியோர்களின் பங்குகளை மறைத்தும், 2 ஆம் வாதியின் தாயார் மற்றும் கணவர் கோபால், இருவரையும் கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாள் வாரிசுகளாக காட்டாமலும், 1 ஆம் பிரதிவாதி மட்டும் வாரீசு போல காட்டி மோசடியாகவும், உண்மைக்கு புறம்பாகவும், கடந்த 09.02.2021 தேதியில் 2 ஆம் பிரதிவாதிக்கு, 1 ம் பிரதிவாதி வழக்கு 1 வது அட்டவணைச் சொத்து முழுவதையும் தான செட்டில்மெண்ட் ஆவணமும், அதேபோல் 3 ஆம் பிரதிவாதிக்கு, 2 ஆம் பிரதிவாதி கடந்த 04.10.2021 தேதியில் வழக்குச் சொத்தின் மற்றொரு பகுதியான வழக்கு 2 வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்தும் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணமும் மோசடியாக பிறப்பித்துக் கொண்டுள்ளனர். மேற்படி ஆவணங்கள், வழக்குச்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:38 +0530

சொத்துக்களைப் பொறுத்து இவ்வாதிகளின் பங்கு பாகத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை. எனவே, வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய மூன்றில் இரண்டு பங்கை பொறுத்து, நயமிதம் பார்த்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும் வகைக்கு பாகப்பிரிவினைக்கான ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

3.1 வாதிகளின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வாதிகள் தூய கரங்களுடன் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை. ஆரம்பத்தில் வழக்குச் சொத்தும், மேற்கண்ட சொத்திற்கு தெற்குபுறமுள்ள 259-ம் எண்ணிலான மனையும் 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்களான கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாள் ஆகியோர்கள் அனுபவத்தில் இருந்து வந்தது. கடந்த 1989-ம் வருடம், தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தின்கீழ் 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அனுபவித்து வந்த வழக்கு சொத்து மற்றும் மேற்கண்ட சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தினையும் 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்களான கிருஷ்ணன்-திருமலையம்மாள் பெயருக்கு பட்டா வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அரசு பட்டா கொடுக்கும் இடம் 3 செண்ட் அளவுக்கு கூடுதலாக இருக்கக் கூடாது என வரையறை இருந்ததால், 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அவர்கள் அனுபவித்து வந்த மொத்த இடம் 6 சென்ட் என இருந்ததால், அதனை வடக்கு, தெற்கு என இரு பகுதிகளாக 3 சென்ட் வீதம் பிரித்து, வடக்கு பகுதி 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்கள் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது. 1ஆம் பிரதிவாதிகளின் பெற்றோர்கள் ஏற்பாட்டின்படி, மேற்கண்ட சொத்தின் தெற்கு பகுதி பிளாட் எண்.259, 1ஆம் வாதி மற்றும் அவரது கணவர் கோபால் பெயருக்கும் பட்டா வாங்கப்பட்டது. தெற்கு பகுதியில் உள்ள சொத்து 1ஆம் வாதி மற்றும் அவரது கணவர் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டாலும், மேற்கண்ட சொத்தினை 1ஆம் பிரதிவாதியின் பெற்றோர்களால்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:43 +0530

இரு சொத்துக்களும் சேர்ந்தரனையாக அவர்களது தனித்த சொத்தாகவே தனித்து அனுபவித்து வரப்பட்டது.

3.2 அதன்பின் கடந்த 1991 ஆம் வருடம், 1 ஆம் பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணனும், தாயார் திருமலையம்மாளும் மேற்கண்ட சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொடுத்தனர். அதன்படி, வழக்கு சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கும், வழக்கு சொத்தின் தென்புறம் உள்ள பிளாட் எண்.259 என்ற சொத்து 1 ஆம் வாதியின் கணவருக்கும் ஒதுக்கப்பட்டது. அப்போதிருந்து வழக்குச் சொத்தினை 1 ஆம் பிரதிவாதி தனித்த உரிமையாளராக இருந்து அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தினை 1 ஆம் வாதியின் குடும்பத்தினர் அடைந்து அனுபவித்து வருகின்றனர். எனவே, வழக்குச் சொத்தைப் பொறுத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு, அவரவர் பங்கினை அவரவர்கள் அனுபவித்து வரும் நிலையில், தற்போது மீண்டும் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கு செல்லத்தக்தல்ல. மேலும், 1 ஆம் பிரதிவாதியின் தந்தையான கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி(1) திருமலையம்மாள்(2) என இரு மனைவிகள் உண்டு. முதல் மனைவி பண்டாரத்தி மூலம், சுப்பையா என்ற மகன் உண்டு. மேற்கண்ட சுப்பையா இறந்து விட்டார். அவருக்கு (1) அன்பு (2) சுதாகர், (3) சுகுமார், (4) கவிதா என நான்கு வாரிசுகள் உண்டு. மேற்படி கிருஷ்ணனுக்கு திருமலையம்மாள் மூலம் கருப்பம்மாள், கோபால், இக்கியம்மாள் என மூன்று வாரிசுகள் உண்டு. மேற்கண்ட கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், செல்வி, மாணிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். மேலும் 1 ஆம் பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணனுக்கு சொந்தமான சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்கண்ட கிருஷ்ணனின் அனைத்து வாரிசுகளும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். அதன்படி மேற்கண்ட கிருஷ்ணனின் முதல் மனைவி பண்டாரத்தியின் மகனான சுப்பையாவின் இறப்புக்குப்பின் அவரின் மேற்சொன்ன நான்கு வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். அதேபோல் மேற்படி கிருஷ்ணனின் 2 ஆம் மனைவியின் வாரிசுகள் ஆறுமுகம் மற்றும் மாணிக்கம் ஆகியோர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும்.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:49 +0530

மேற்கண்டவர்களை வழக்கின் தாப்பினர்களாக சேர்க்காததால் பாகப்பிரிவினை வழக்கு Non-Joinder of necessary Party எனும் தோசத்தின் கீழ் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

3.3 மேலும், கிருஷ்ணன்-திருமலையம்மாளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 786/2- ன் மனை எண்.259-ஐ வழக்கில் சேர்க்கவில்லை. எனவே, வழக்கு Partial Partition என்பதன் கீழ் தள்ளுபடி செய்யத்தக்கதாகும். வழக்குச் சொத்தானது, 1991-ம் வருடம் முதல் இந்த 1 ஆம் பிரதிவாதிக்கு தனக்கு பாகத்தில் கிடைத்து அனுபவித்து வந்து, கடந்த 09.02.2021 ஆம் தேதி, 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன்பின், கடந்த 04.10.2021-ம் தேதி வழக்கு சொத்தின் ஒரு பகுதியான, 2 வது அட்டவணைச் சொத்தினை 2 ஆம் பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி பதிவு செய்து கொடுத்துவிட்டார். எனவே, வழக்கு சொத்தினை தற்போது 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களுடைய தனித்த சொத்தாக வைத்து, தனித்து அனுபவித்து வருகின்றனர். எக்காலத்திலும் வாதிகள் வழக்கு சொத்தில் எவ்வித அனுபவத்திலும் இருக்கவில்லை. எனவே, வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இல்லாமல், நீதிமன்ற கட்டணம், நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37(2) ன்கீழ் செலுத்தி தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதில்லை. வாதிகள் கோரும் பாக விகிதம் தப்பும் தவறுமாக கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு பரிகார பாக விகிதமாக 2/3 பங்கு வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதில்லை.

3.4 1 ஆம் வாதியின் உடன்பிறந்த சகோதரர் சுப்பையாவின் மனைவியே இந்த 1 ஆம் பிரதிவாதி ஆவார். 1 ஆம் வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சிலவற்றினை அவர்களது வாரிசுகள் அனைவரும் பாகப்பிரிவினை செய்து அவரவர்கள் அனுபவித்து வருகின்றனர். 1 ஆம் வாதிக்கு, கடையநல்லூர் கிராமம், நத்தம் சர்வே எண்:721/730/2, புது வார்டு-22, தெரு, எண்-3 வேதகோயில் க.எண்: 34-3 என்ற வீடு ஒதுக்கப்பட்டது. 1 ஆம் பிரதிவாதியின் கணவர் சுப்பையாவுக்கு கிடைத்த பாகச் சொத்தில் இருந்த பழைய வீட்டினை இடித்துவிட்டு, அவர் தற்போது புது வீடு கட்ட ஆரம்பித்தார். அப்போது இந்த வாதியும் அவரது சகோதரர்களும் தங்களுக்கு தற்போதைய மதிப்புப்படி கூடுதல் பணம் தர வேண்டுமென்றும்,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:20:55 +0530

இல்லையெனில் வீட்டினை கட்ட விடமாட்டோம் என்றும் இந்த வழக்கு சொத்திலும் பங்கு கேட்போம் என்றும் மிரட்டிய நிலையில், இவ்வழக்கானது பணம் பறிக்கும் எண்ணத்துடனே வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வாதி, தென்காசி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.59/2022 என்ற வழக்கை தாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், தற்போது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வாதிகளுக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய எவ்வித வழக்குமூலமும் இல்லை. மற்றபடி வாதிகள் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகளாகும். எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்த தென்காசி, முதன்மை சார்பு நீதிமன்றம், இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்களை கடந்த 07.02.2023 ம் தேதியன்று வனைந்துள்ளது.

**எழுவினாக்கள்:**

1. Whether the Suit properties already partitioned?
2. Whether the Plaintiffs are entitled for 2/3 share in the suit property?
3. Whether the Plaintiffs are entitled for Preliminary Decree for Partition in the suit properties?
4. What other reliefs if the Plaintiffs are entitled?

5. இந்நிலையில் மாண்புமிகு தென்காசி, முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களால் 10.04.2024 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட A.No.75/2024–ன் உத்தரவின்படி தென்காசி, முதன்மை சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:01 +0530

விசாரணைக்காக மாற்றம் செய்யப்பட்டது. இவ்வழக்கைப் பொறுத்து, இந்நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில், வழக்கு 2 ஆம் வாதி திருமதி. செல்வி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், வழக்கு 1 ஆம் பிரதிவாதி திருமதி. இசக்கியம்மாள் பி.சா.1 ஆகவும், 3 ஆம் பிரதிவாதி திருமதி. பானுமதி பி.சா.2 ஆகவும், திருமதி. புணகர்த்தா என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வழக்குச் சொத்தானது கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு ஆதி திராவிடர் நலத்துறையினரால் வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைப்பட்டா மனை என்றும், அதைப் பொறுத்து அவர் இறப்புக்கு பிறகு 2 ஆம் வாதியின் தாயார் கருப்பம்மாள், 2 ஆம் வாதியின் கணவர் கோபால், 1 ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் அடைந்து அனுபவம் செய்து வந்த நிலையில், இந்த வாதிகளுக்கு வழக்குச் சொத்துக்களில் மூன்றில் இரண்டு பாகம் உள்ளது என்றும், இதுசம்பந்தமாக 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்துவிட்டதாகவும், அதேபோல், 2 ஆம் பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதிக்கு வழக்கு 2 வது அட்டவணைச் சொத்தை மோசடியாக மாற்றம் செய்துவிட்டதாகவும், இவ்வாறு வாதிகளுக்குரிய பாகத்தினைப் பொறுத்து 1 ஆம் பிரதிவாதி மோசடியாக செயல்பட்டுள்ளதாக வழக்கில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகள் கோரியபடி பரிகாரங்கள் வழங்கலாம் என வாதிட்டார்.

7. கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்கள் வாதிடும்போது, இந்த வழக்கில் உண்மை இல்லை என்றும், வழக்குச் சொத்தான 3 செண்ட் இடமானது கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு அரசாங்கத்தால் நில உடைமையின்கீழ் ஒப்படைப்பு கொடுக்கப்பட்ட நிலையில், அதற்கு தென்புறமுள்ள 3 செண்ட் இடத்தைப் பொறுத்து, அவர்களின் மகன் கோபாலுக்கு இலவச மனை இடமாக கொடுக்கப்பட்டது என்றும், ஆனால், 6 செண்ட் இருந்ததால் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்க

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:08 +0530

மாட்டார்கள் என தெரிந்து, இரண்டு சொத்துக்களாக பிரிக்கப்பட்டது என்றும், அவ்வாறு பிரிக்கப்பட்டதை கிருஷ்ணனும், திருமலையம்மாளும் சேர்ந்தே அனுபவம் செய்து வந்த நிலையில், இந்த 1ஆம் பிரதிவாதிக்கு 3 செண்ட் இடத்தை பாகப்பிரிவினையில் கொடுத்துவிட்டதாகவும், அதைப் பொறுத்து வழக்கு அட்டவணைச் சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி பாகப்பிரிவினையில் அடைந்து, தொடர்ந்து இதுநாள் வரை அனுபவம் செய்துவந்து, 2ஆம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளதாகவும், 2ஆம் பிரதிவாதி அவரது மகள் 3ஆம் பிரதிவாதிக்கு ஒரு பகுதியை கொடுத்துள்ள நிலையில், இதில் வாதிகளுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்றும், இந்த வழக்கைப் பொறுத்து உரிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கினைப் பொறுத்து வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யலாம் என வாதிட்டார்.

8. <u>எழுவினா எண்கள்.1 மற்றும் 2–க்கான தீர்வு</u>

இந்த வழக்குச் சொத்தானது ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதா? எனப் பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கின் 2ஆம் வாதி செல்வி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தனது தாத்தா கிருஷ்ணன், பாட்டி திருமலையம்மாள் ஆகியோர்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறையினரால் இலவச வீட்டு மனை திட்டத்தின்கீழ் பட்டா எண்.46, மனை எண்.264 க்காக கொடுக்கப்பட்ட பட்டா என்றும், அதைப் பொறுத்து எந்தவித பிரிவினையும் இல்லாமலும், ஆவணம் இல்லாமலும் மேற்படி கிருஷ்ணன் 06.04.1992 தேதியிலும், திருமலையம்மாள் கடந்த 08.01.2003 தேதியிலும் இறந்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். இறந்துபோன கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு கருப்பம்மாள், கோபால், 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றும், இதில் 1ஆம் வாதியை மேற்படி கோபால் திருமணம் செய்து குழந்தைகள் இல்லாததால் 2ஆம் வாதியை இரண்டாம் தாரமாக திருமணம் செய்து, அதனடிப்படையில் 3ஆம் வாதி பிறந்ததாகவும், பின்னர் கோபால் கடந்த 19.11.2021 தேதியில் இறந்துவிட்ட நிலையில், வாதிகள் மட்டுமே கோபாலுக்கு வாரிசுகள் எனவும்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:13 +0530

குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். இதன்படி கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளின் வாரிசான 2 ஆம் வாதியின் தாயார், கருப்பம்மாளுக்கு ஒரு பங்கும், 2 ஆம் வாதியின் கணவர் என்ற முறையில் கோபாலுக்கு ஒரு பங்கும், 1 ஆம் வாதிக்கு ஒரு பங்கும், மொத்தம் மூன்றில் இரண்டு பாகம் இந்த 2 ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 2 ஆம் வாதியின் தாயார் கருப்பம்மாள் 28 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டதாகவும், கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், 2 ஆம் வாதி செல்வி, மாணிக்கம் ஆகிய மூன்று பெண் குழந்தைகள் என்றும், அதில் ஆறுமுகம் 28 ஆண்டுகளாக காணாமல் போய்விட்டதாகவும், மாணிக்கம் 1.1/2 வயது குழந்தையாக இருந்தபோது ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டு, வெளியூரில் வசித்து வருவதாகவும், அந்த ஆறுமுகம் மற்றும் மாணிக்கம் ஆகியோர்களுக்கு சேரவேண்டிய பாகத்தை அவர்களுக்கு கொடுப்பதற்கு தயாராக உள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

9. மேலும், இவ்வாறு 2 ஆம் வாதிக்கு மூன்றில் இரண்டு பாகம் உரிமை உள்ள நிலையில், அதை மறைத்து 1 ஆம் பிரதிவாதி, கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளின் வாரிசான இந்த 2 ஆம் வாதியை வாரிசாக காட்டாமல், மோசடியாக கடந்த 09.02.2021 தேதியில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 2 ஆம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டதாகவும், அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 04.10.2021 தேதியில் 3 ஆம் பிரதிவாதிக்கு, 2 ஆம் பிரதிவாதி ஒரு பகுதி சொத்தை தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்ததாகவும், அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தனக்கு பாகம் உள்ள சொத்தைப் பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதால், அந்த ஆவணங்கள் செல்லாது என்றும், இதுசம்பந்தமாக கடந்த 31.01.2022 தேதியில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அது வா.சா.ஆ.4 ஆகவும், அதைப் பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், வாதிகள் தரப்பு அவர்களது குடும்பத்தின் கொடிவழி பட்டியல் வா.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.04.17 21:21:18 +0530

10. இதை மறுக்கும் பிரதிவாதிகள் தரப்பில், 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், திருமலையம்மாளுக்கும் கிருஷ்ணனுக்கும் வழக்குச் சொத்துக்கான 3 செண்ட் இடத்திற்கு ஆதி திராவிடர் நலத்துறையினரால் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டது என்றும், அந்தச் சொத்துக்கு தெற்கு பக்கமுள்ள மனை எண்.259 அதே கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அரசு பட்டா கொடுக்கும் இடம் 3 செண்டுக்கு கூடுதலாக இருக்கக்கூடாது என வரையறை இருந்ததால், அவ்வாறு கிருஷ்ணனும், திருமலையம்மாளும் அனுபவித்து வந்த இடம் 6 செண்ட் என இருந்ததால், இரு பகுதியாக வடக்கு, தெற்கு என பிரிவினை செய்து, வடக்கு பகுதி தன் பெற்றோர்களுக்கும், தெற்கு பகுதி ப்ளாட் எண்.259 என்ற சொத்தானது 1ஆம் வாதி மற்றும் அவரது கணவர் கோபாலுக்கும் பட்டா வழங்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். அதன்பின்னர் கடந்த 1991ம் ஆண்டு கிருஷ்ணனும், திருமலையம்மாளும் சேர்ந்து வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாகவும், அதன்படி வழக்குச் சொத்தானது 1ஆம் பிரதிவாதிக்கும், அதற்கு தென்புறமுள்ள மனை எண்.259, 1ஆம் வாதியின் கணவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு, தொடர்ந்து அனுபவம் செய்து வருவதாக சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்தைப் பொறுத்து மீண்டும் பாகம் கோர இயலாது என்றும், அந்தக் கிருஷ்ணன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றும், அதில் முதல் மனைவி பண்டாரத்திக்கு சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அந்த சுப்பையா இறந்துவிட்டதால் அவருக்கு (1) அன்பு (2) சுதாகர், (3) சுகுமார், (4) கவிதா என்ற நான்கு வாரிசுகள் உள்ளதாகவும், அந்த இரண்டாம் மனைவி திருமலையம்மாள் மூலம் கருப்பம்மாள், கோபால், இசக்கியம்மாள் ஆகிய மூன்று வாரிசுகளும், அந்த கருப்பம்மாள் இறந்துவிட்டதால் அவருக்கு ஆறுமுகம், 2ஆம் வாதி செல்வி, மாணிக்கம் என்ற வாரிசுகள் உள்ளதாகவும், இதை அனைத்தையும் மறைத்து வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தேவையான நபர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இதுசம்பந்தமாக, அவர்களின் குடும்பக் கொடிவழி பட்டியல் பி.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:24 +0530

11. மேலும், 1 ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்தைப் பொறுத்து கடந்த 09.02.2021 தேதியில் 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாகவும், அதில் ஒரு பகுதியை கடந்த 04.10.2021 தேதியில் 2 ஆம் பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்து அனுபவம் செய்து வருவதாகவும், இதை மறைத்து பொய்யான வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். 1 ஆம் வாதியின் உடன்பிறந்த சகோதரரான சுப்பையாவின் மனைவி, 1 ஆம் பிரதிவாதி என்றும், 1 ஆம் வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ததில் பிரச்சினை ஏற்பட்டு, கூடுதல் பணம் தரவேண்டுமென இந்த 1 ஆம் வாதி கேட்டதாகவும், பின்னர் தகராறு செய்து அசல் வழக்கு எண்.59/2022 என்ற வழக்கை தென்காசி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், இந்நிலையில் வேண்டுமென்றே இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக குறிப்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

12. இதைச் சார்ந்து பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட 3 ஆம் பிரதிவாதி பானுமதி தனது சாட்சியத்தில், தனது தாயார் இசக்கியம்மாள் அவருக்கு பாகமாக கிடைத்தச் சொத்தை தான செட்டில்மெண்ட் மூலம் ஒரு பகுதியை தனக்கு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அதைப் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், வாதிகளுக்கு வழக்குச் சொத்துக்களில் எந்தவித உரிமையோ, அனுபவமோ, பாத்தியதையோ கிடையாது என்றும், இவ்வாறான நிலையில், வாதிகள் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. மேலும், பி.சா.3 புணகர்த்தா தனது சாட்சியத்தில், கிருஷ்ணன் என்பவருக்கு பண்டாரத்தி மற்றும் திருமலையம்மாள் என்ற இரண்டு மனைவிகள் உள்ளதாகவும், மேற்படி பண்டாரத்தி மூலம் சுப்பையா என்ற மகனும், அந்த சுப்பையாவுக்கு அன்பு, சுகுமார், சுதாகர், கவிதா என்ற நான்கு வாரிசுகள் உள்ளதாகவும், அதேபோல், திருமலையம்மாள் மூலம் கருப்பம்மாள், கோபால், இசக்கியம்மாள் என்ற

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:30 +0530

மூன்று வாரிசுகளும், அந்த கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், செல்வி, மாணிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், இந்த விபரம் தனக்கு தெரியும் என்றும், வழக்குச் சொத்தை பாகப்பிரிவினை செய்த கிருஷ்ணன், 1ஆம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தை கொடுத்த விபரம் தனக்கு தெரியும் என்றும், அதற்கு தென்புறமுள்ள மனை எண்.259—ஐ, 1ஆம் வாதியின் கணவருக்கு பாகமாக கொடுக்கப்பட்டது தனக்கு தெரியும் எனக் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

14. இவ்வாறு இரு தரப்பிலும் சாட்சியமளித்துள்ள நிலையில், வா.சா.ஆ.1 கொடிவழி பட்டியலை பரிசீலனை செய்தபோது, கிருஷ்ணனுக்கு திருமலையம்மாள் மட்டுமே மனைவி எனவும், அந்த இருவருக்கும் கருப்பம்மாள், கோபால், 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் ஆகியோர்கள் மட்டுமே வாரிசுகள் எனவும், இறந்துபோன கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், 2ஆம் வாதி செல்வி, மாணிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், கோபாலுக்கு 1ஆம் வாதியான கிருஷ்ணம்மாள் முதல் மனைவி எனவும், மேற்படி கருப்பம்மாளின் மகளான 2வது வாதி செல்வி, இரண்டாவது மனைவி என்றும், 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள், சுப்பையா என்பவரை திருமணம் செய்து, இந்த 2, 3 பிரதிவாதிகளான மாரியம்மாள் மற்றும் பானுமதி ஆகியோர்கள் வாரிசுகள் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இதை மறுக்கும் பிரதிவாதிகள் தரப்பில், கிருஷ்ணனுக்கு இரண்டு மனைவிகள் எனவும், முதல் மனைவி பண்டாரத்தி மூலம் சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அவர் இறந்துவிட்டதாகவும், அந்த சுப்பையாவுக்கு அன்பு, சுதாகர், சுகுமார், கவிதா என்ற வாரிசுகளும், இரண்டாம் மனைவி திருமலையம்மாள் மூலம் கோபால் என்ற மகனும், அந்த கோபாலுக்கு கிருஷ்ணம்மாள், செல்வி என்ற இரண்டு மனைவிகளும், மகள் கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், செல்வி, மாணிக்கம் என்ற வாரிசுகளும், 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாளுக்கு மாரியம்மாள், பானுமதி என்ற 2, 3 பிரதிவாதிகளும், சுரேஷ் என்ற மகனும் உள்ளதாகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

15. இவ்வாறு இரு தரப்பிலும், குடும்பக் கொடிவழி பட்டியல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி என்ற முதல்

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.04.17 21:21:35 +0530

மனைவி இருந்து, அவருக்கு வாரிசுகள் உள்ளதாக பிரதிவாதிகள் தரப்பிலும், வாதிகள் தரப்பில் கிருஷ்ணனுக்கு திருமலையம்மாள் மட்டுமே மனைவி எனவும், அவர்களுக்கு வாரிசுகள் உள்ளதாகவும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக இரு தரப்பிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதா? எனப் பார்க்கும்போது, பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளபடி, கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி என்ற முதல் மனைவி உள்ளதாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அந்த பண்டாரத்தி என்பவர் மூலம் சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அந்த சுப்பையாவுக்கு நான்கு வாரிசுகள் உள்ளதாகக் கூறப்படும் நிலையில், அந்த நான்கு பேர்களைப் பொறுத்து அவர்களுடைய முகவரியை நீதிமன்றத்தில் தெரிவித்தோ அல்லது அவர்களின் பிறப்புச் சான்றிதழ்களையோ, வாரிசு சான்றிதழ்களையோ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியோ அல்லது அந்த நான்கு நபர்களை இந்த வழக்கில் சேர்ப்பதற்கோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக வா.சா.1 டம் குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்டபோது, பண்டாரத்தி என்ற மனைவி கிருஷ்ணனுக்கு இல்லை என்றும், அந்த பண்டாரத்தி மூலம் எந்த ஒரு வாரிசுகளும் இல்லை என்றும், பிரதிவாதிகள் தரப்பில் பொய்யான விபரங்களைக் கூறியுள்ளதாக மறுத்தே சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு பிரதிவாதிகள் பொய்யான விபரங்களை கூறியுள்ளதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ள நிலையில், இதை மறுக்கும் பொருட்டு, அவ்வாறு பண்டாரத்தி என்ற முதல் மனைவி கிருஷ்ணனுக்கு இருந்து, அவர்களுக்கு வாரிசுகள் இருந்ததாகக் கூறும் பிரதிவாதிகள் தரப்பில்தான் இதுகுறித்து எடுத்துரைக்கப்படவேண்டும். அவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளதா? எனப் பார்க்கும்போது, பி.சா.1, பி.சா.2 தங்களது சாட்சியங்களில், பண்டாரத்தி மகனான சுப்பையாவின் வாரிசுகள் தற்போது சென்னையில் வசிப்பதாகவும், அவர்கள் தங்களிடம் பாகம் கேட்டு வருவதாகவும் சாட்சியமளித்துள்ளனர். அவ்வாறு அந்த வாரிசுகள் பிரதிவாதிகளிடம் பாகம் கேட்பதாகக் கூறும் நிலையில், இந்த வழக்கு நிலுவையில் இருப்பது அவர்களுக்கு தெரியுமா? எனக் கேட்டபோது தெரியும் என சாட்சியமளித்துள்ள நிலையில், அவ்வாறு பாக வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து மேற்படியார்களுக்கு தெரிந்ததாகக் கூறப்படும் நிலையில், அவர்களை ஏன் ஒரு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:40 +0530

தரப்பினராக இந்த வழக்கில் சேர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் விளக்கப்படவில்லை. அதேபோல், அந்த சுப்பையாவின் வாரிசுகள் இந்தப் பிரதிவாதிகளும், அவர்களுக்குரிய சட்டபூர்வமான ஆவணங்களான, அவர்களுக்குரிய பிறப்பு சான்றிதழ்களையோ, வாரிசு சான்றிதழ்களையோ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி முதல் மனைவி என்றும், அவர் மூலமாக சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அந்த சுப்பையாவுக்கு அன்பு, சுகுமார், சுதாகர், கவிதா என நான்கு மக்கள் இருந்ததாகவும் எடுத்துரைப்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

16. இந்நிலையில், பி.சா.3 புணகர்த்தா என்பவர் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் சாட்சியத்தில் கூறியபடி, கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி முதல் மனைவி என்றும், அவர் மூலமாக சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அந்த சுப்பையாவுக்கு நான்கு பேர்கள் வாரிசுகள் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், பி.சா.3 டம் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பியபோது, தனக்கு 2, 3 பிரதிவாதிகளை தெரியாது என்றும், இசக்கியம்மாள் மட்டுமே தெரியும் என்றும், 35 வருடங்களுக்கு முன்னர் பாகப்பிரிவினை நடந்ததாகவும், கிருஷ்ணனின் முதல் மனைவி பண்டாரத்தி எனவும், அவர் இரண்டாவது திருமணம் முடித்தது தெரியுமா என்றால் தெரியாது என்றும், அருகிலிருந்தவர்கள் சொல்லிக்கொண்டார்கள் என்றும், சுப்பையா முதல் தாரத்து மகன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது என்றும், சுப்பையா எப்போது இறந்தார் எனத் தெரியவில்லை என்றும், எங்கு வைத்து இறந்தார் என்பது தெரியவில்லை என்றும், சுப்பையாவுக்கு நான்கு குழந்தைகள் என்றும், பெயர்கள் தனக்கு ஞாபகமில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி பி.சா.3 ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில், பி.சா.3 ன் சாட்சியம் ஒரு முக்கியமான சாட்சியமாக கருத இயலவில்லை. ஏனெனில், அவருக்கு 1 ஆம் பிரதிவாதியின் மகள்களான 2, 3 பிரதிவாதிகளை தெரியாத நிலையில், கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி என்ற மனைவி இருந்ததாகவும், அவர் மூலம் சுப்பையா என்ற மகன் பிறந்து, அவருக்கு

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.04.17 21:21:46 +0530

நான்கு வாரிசுகள் இருப்பதாக பேசிக்கொண்டதாக பி.சா.3 கூறுவதும் ஏற்கும்படி இல்லை. அவ்வாறு அந்த சுப்பையா எங்கு வைத்து இறந்தார்? எப்போது இறந்தார்? என்பது குறித்து பி.சா.3 க்கு தெரியாத நிலையில், அதைப் பொறுத்து பி.சா.3 ன் சாட்சியத்தின்படி, கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி என்ற ஒரு மனைவி இருந்ததாக முடிவு செய்ய இயலவில்லை. அவ்வாறு முதல் திருமணத்தைப் பற்றி முழுவதுமான விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாமல், கிருஷ்ணனுக்கு பண்டாரத்தி என்ற முதல் மனைவி இருந்ததாகக் கூறுவதால் மட்டும், அந்தச் சங்கதி நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டதாக கருதமுடியாது. இவ்வாறு கூறும் சங்கதியானது, உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டால் மட்டுமே அதை நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டதாகக் கருதமுடியும். ஆனால், இந்த வழக்கைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளபடி, கிருஷ்ணனுக்கு முதல் மனைவி பண்டாரத்தி இருந்ததாகக் கூறுவதையும், அந்த பண்டாரத்தி மூலம் சுப்பையா என்ற மகன் இருந்ததாகவும், அவர் இறப்புக்கு பிறகு நான்கு வாரிசுகள் தற்போதுவரை உயிருடன் இருந்து வருவதாக கூறுவதையும் நீதிமன்றத்தில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எடுத்துரைக்க பிரதிவாதிகள் தரப்பில் தவறிவிட்டனர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. இந்நிலையில் இந்த வழக்கினைப் பொறுத்து, கிருஷ்ணன்–திருமலையம்மாளுக்கு 3 செண்ட் நிலமானது அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறும் நிலையில், அந்த இலவச ஒப்படைவு பட்டா இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை. அவ்வாறு வழக்குச் சொத்தானது, கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு அரசாங்கத்தால் ஒப்படைவு செய்யப்பட்டதாகக் கூறுவதை பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டார்கள் என்ற காரணத்திற்காக, வழக்குச் சொத்தானது, ஆதிதிராவிடர் நலத்துறையினரால் கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்பட்டதாக ஆவணங்கள் இல்லாமல் எடுத்துரைக்கப்பட்டதாகக் கருதமுடியாது. ஏனெனில், ஒரு சொத்தானது குறிப்பிட்ட நபருக்கு கிடைத்து, அனுபவம் செய்து வந்ததாக எந்த ஒரு ஆவணமும்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:51 +0530

தாக்கல் செய்து முன்னிலைப்படுத்தப்படாமல், வழக்குரையிலும், அதைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பிலும் ஆவணங்கள் இல்லாமலும், அதை ஒப்புக்கொண்ட நிலையிலும் மேற்படி சங்கதியானது ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. இருந்தபோதிலும், இந்த வழக்கைப் பொறுத்து, வழக்குச் சொத்தானது கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாள் ஆகியோர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா கொடுத்ததாகக் கூறும் நிலையில், அதைப் பொறுத்து தெற்குபுறம் உள்ள மனை எண்.259 ஆனது கோபாலுக்கும், அவரது மனைவியான 1ஆம் வாதிக்கும் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அந்த இலவச மனை பட்டாக்கள் எதுவும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை. இவ்வாறு இரண்டு பட்டாக்களும் குறியீடு செய்யப்படாத நிலையில், வழக்குச் சொத்தானது கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாளுக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்பதை எடுத்துரைக்க இரு தரப்பினரும் தவறிவிட்டனர்.

18. மேலும், கிருஷ்ணன்–திருமலையம்மாளுக்கு 3 செண்ட் இலவச மனைப்பட்டா கொடுக்கப்பட்டதாகக் கூறும் நிலையில், அதே கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாள் சேர்ந்து மொத்தம் 6 செண்ட் இடத்தை அனுபவம் செய்து வந்ததாகவும், 3 செண்ட் இடத்திற்கு மட்டுமே இலவச வீட்டு மனைப் பட்டாவாக கொடுக்கவேண்டுமென வரையறை உள்ளதால், வடக்கு, தெற்கு பகுதி என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, அதனடிப்படையில் இரண்டு மனை பட்டாக்கள் கொடுக்கப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ள நிலையில், அதை எடுத்துரைக்கும் பொருட்டு எந்தவித ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகளின் தரப்பின்படி, மனை எண்.259, 1ஆம் வாதி மற்றும் அவரது கணவர் கோபாலுக்கு இலவச வீட்டுமனை பட்டா கொடுக்கப்பட்டதாக ஒப்புக்கொண்ட நிலையில், அதன்பிறகு அந்த 6 செண்ட் இடமும் கிருஷ்ணன் மற்றும் திருமலையம்மாள் ஆகியோர்களும் சேர்ந்து அனுபவத்தில் இருந்து வந்ததற்கும் பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைக்க எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையில்,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:21:57 +0530

பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளபடி வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு, அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் வழக்குச் சொத்தானது 1ஆம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாகவும், மனை எண்.259 மகன் கோபாலுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை எப்போது ஏற்பட்டது? என்பது குறித்தும், யார் யார் முன்னிலையில் ஏற்பட்டது? என்பது குறித்தும் பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு பிரதிவாதிகள் தரப்பில் மட்டுமே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாகக் கூறியுள்ள நிலையில், அதைப் பொறுத்து பிரதிவாதிகளே நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்படவேண்டும். இவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை எப்போது ஏற்பட்டது? எனக் கூறப்படாத நிலையில், வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு 1ஆம் பிரதிவாதி இசக்கியம்மாள் பெயரில் வழக்குச் சொத்தைப் பொறுத்து ஏதேனும் ஒரு ஆவணத்தில் பதிவுகள் ஏற்பட்டுள்ளதா? என்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், ஒரு வாய்மொழி பாகப்பிரிவினையானது எவ்வாறு நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்படவேண்டுமென கீழ்க்கண்ட முன்வழித் தீர்ப்புக்களில் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி,

**Kale & Others -vs- Deputy Director of Consolidation others decided by Hon'ble Apex court reported in 1976 AIR page 807 as follows,**

> *"Constructive work in the larger interest of the country. The Courts have, therefore, leaned in favour of upholding a family arrangement instead of disturbing the same on technical or trivial grounds. Where the Courts find that the family arrangement suffers from a legal lacuna or a formal defect the rule of estoppel is pressed into service and is applied to shut out plea of the person who being a party to family arrangement seeks to unsettle a settled dispute and claims to revoke the family arrangement under which he has himself enjoyed some material benefits. The law in England on this point is almost the same. In Halsbury's Laws of England, Vol. 17, Third Edition, at pp. 215-216, the following apt observations regarding the essentials of the family settlement and the principles governing the existence of the same are made:*
>
> *"A family arrangement is an agreement between members of the same family, intended to be generally and reasonably for the benefit of the family either by compromising doubtful or disputed rights or by preserving the family property or the peace and security of the family by avoiding litigation or by saving-its honour.*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:02 +0530

*The agreement may be implied from a long course. Of dealing, but it is more usual to embody or to effectuate the agreement in a deed to which the term "family arrangement" is applied. Family arrangements are governed by principles which are not applicable to dealings between strangers. The court, when deciding the rights of parties under family arrangements or claims to upset such arrangements, considers what in the broadest view of the matter is most for the interest of families, and has regard to considerations which in dealing with transactions between persons not members of the same family, would not be taken into account. Matters which would be fatal to the validity of similar transactions between strangers are not objections- to the binding effect of family arrangements".*

\

*In other words to put the binding effect and the essentials of a family settlement in a concretized form, the matter may be reduced into the form of the following propositions:*

*(1) The family settlement must be a bona fide one so as to resolve family disputes and rival claims by a fair and equitable division or allotment of properties between the various members of the family;*

*(2) The said settlement must be voluntary and should not be induced by fraud, coercion or undue influence:*

*(3) The family arrangement may be even oral in which case no registration is necessary;*

*(4) It is well-settled that registration would be necessary only if the terms of the family arrangement are reduced into writing. Here also, a distinction should be made between a document containing the terms and recitals of a family arrangement made under the document and a mere memorandum pre pared after the family arrangement had already been made either for the purpose of the record or for in formation of the court for making necessary mutation.*

*In such a case the memorandum itself does not create or extinguish any rights in immovable properties and therefore does not fall within the mischief of s. 17(2) of the Registration Act and is, therefore, not compulsorily registrable;*

*(5) The members who may be parties to the family arrangement must have some antecedent title, claim or interest even a possible claim in the property 'It which is acknowledged by the parties to the settlement. Even if one of the parties to the settlement has no title but under the arrangement the other party relinquishes all its claims or titles in favour of such a person and acknowledges him to be the sole owner, then the antecedent title must be assumed and the family arrangement will be upheld and the Courts will find no difficulty in giving assent to the same;*

*(6) Even if bona fide disputes, present or possible, which may not involve legal claims are settled by a bona fide family arrangement which is fair and equitable the family arrangement is final and binding on the parties to the settlement.*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:07 +0530

*The principles indicated above have been clearly enunciated and adroitly adumbrated in a long course of decisions of this Court as also those of the Privy Council and other High Courts, which we shall discuss presently.*

**Backiammal -vs- C.Vasanthaa decided by Hon'ble High court of Madras in A.S.No.126 of 2011 dated 07.06.2022 as follows,**

*"Oral partition-Burden on the party asserting:*

*The plea of oral partition should be proved by cogent evidence by the claimant, to the contrary the deposition of the 3 rd appellant would show that the alleged partition between two sons of Subbammal viz., Kuppusamy Naidu and Chinnasamy Naidu is not supported by way of any evidence. There was admittedly, no Chitta, Patta or sub-division for partition nor is there any evidence or witness to show that there was a oral partition. Importantly, during the course of cross examination the appellant herein had deposed the following:*

*i) There is no written evidence to show that after the alleged oral partition Kuppusamy Naidu and Chinnasamy Naidu were engaged in agriculture/ Cultivation separately.*

*ii) There has been no mutation of the revenue records pursuant to the oral transfer.*

*iii) There has been no sub-division nor transfer of the patta pursuant to reflecting oral transfer.*

*iv) There are no witnesses in support of the oral transfer. It is settled that when a claim of oral partition is made the burden is on the party setting up the claim of oral partition and the burden is onerous and ought to be discharged by letting in cogent evidence. However, admittedly, no evidence whatsoever has been let in by the appellant herein. The case of oral partition cannot be accepted merely on the ipse dixit of a party. In this regard it may be relevant to refer to the following judgments:*

*Damodara Naicker v. Collector of Chengalpattu District and 7 others reported in 2003 SCC OnLine Mad 155 : (2003) 2 CTC 551 Even according to Damodara Naicker prior to 1932, himself and his two brothers constituted Joint Hindu Family and the joint family owned 10 acres of land in Papparambakkam village. Damodara Naicker would plead oral partition in the year 1932. It is for him to prove the same. Debendra Nath Bez v. Kanan Bez, 2011 SCC OnLine Cal 4295 : (2012) 1 CHN 84 : (2012) 109 AIC 931 : (2012) 1 Cal LT 226 : (2012) 1 Cal LJ 5 : (2012) 4 ICC 218 at page 85*

*9. An amicable arrangement amongst the co-owners should not be confused with an oral partition. A mere arrangement as to possession of convenience of the parties is not a partition by metes and bounds. Such amicable arrangement can never be operative and binding for all time to come. Such arrangement does not*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:12 +0530

*destroy the joint character of the properties nor bars a suit for partition at the instance of one of the co-owners dissatisfied with the arrangement. The burden lies upon the party, who asserts oral partition to prove partition. Gispati alias Gurudas Bhattacharya v. Hrishikesh Santra & Ors reported in 2018,SCC OnLine Cal 6341 : If one contends that a property stood partitioned orally, then it is the bounden duty of the person claiming to have such oral partition to prove that partition. Burden of proof is entirely on the person who claims oral partition. Such burden, at no point of time, has been shifted to the defendants to prove that there was no partition. Therefore, initial burden lies upon the plaintiff to prove oral partition.*

*Gnanaiyan v. Russaliyan reported in 2021 SCC OnLine Mad 6016 : (2022) 1 Mad LJ 36 The burden of proof to prove the oral partition is upon the party,who is asserting that there was an oral partition in the family.*

*P.Jayanthi v. C.Hemathi reported in 2022 SCC OnLine Mad 1053 The plaintiff has approached the Court with a specific case that there was a oral partition between G. Elumalai and his brother Parthasarathy. Therefore, the burden of proof is upon the plaintiff to prove the oral partition.*

**M.Shanmugam (died) and others -vs-1. S.Ayyavu and others decided by the Hon'ble High court of Madras in S.A.No.269 of 2013 dated 03.07.2023 as follows,**

*"15. Hence, the defendants have proved that the properties were divided by oral partition. Further, the following authority was relied on by of the plaintiff, which is not applicable to the case on hand.*
*(i) In Chitra vs Saroja and other 2017 (2) MWN (Civil) 241, paragraph 10 is extracted hereunder:-*
*10. In Ramulu Ammal v. Ramachandra Reddy and Others [2009-3-L.W. 622], the plea with regard to oral partition by marking of revenue records to sustain the same came up for consideration and it is relevant to extract the following paragraphs of the said judgment:*

*23. The onus of proof as well as the onus probandi is on the defendant to prove that there was oral partition before the panchayatars. But it is clear that absolutely there is no evidence much less reliable evidence to uphold the alleged oral partition. No panchayatar was examined on the side of the defendant to prove such panchayat was held and the oral partition took place. In a village, if really a partition had taken place in the presence of panchayatars, certainly some evidence in that regard must be available and the same should have been adduced before the court. But, that was not done so.*

*24. The learned counsel for the plaintiffs appositely and appropriately would invite*
*the attention of this Court to the indubitable fact that DW2 who was examined on the side of the defendant to prove oral partition admittedly was a small boy, aged about 5 years at the time of panchayat and he also during cross examination*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:17 +0530

*candidly admitted that since the deceased D1 told him about the oral partition, he came to know about it.*

*25. It is obvious and axiomatic, apparent and explicit that such sort of hear say evidence in this sort of serious matters is totally not permissible legally. DW1, the widow of deceased D1 only relied on the evidence of DW2 to prove the alleged oral partition. Hence, the contention of the plaintiffs that there was no oral partition, is well founded.*

*In para 29 of the said judgment, the learned Single Judge of this Court has placed reliance upon the decisions in Girija Nandini Devi and Others v. Bijendra Narain Choudary [AIR 1967 SC 1124], Sawarni v. Inder Kaur and Others [1996 (6) SCC 223], Kammavar Sangam through its Secretary R.Krishnasamy v. Mani Janagarajan [1999 (III) CTC 304 = 1999-3- L.W.727], Guruvammal and another v. Subbiah Naicker and Others [1999 (III) CTC 650 = 2000-1-L.W.488] and Gopaliappa v.M.Shanmugam (Died) vs S.Ayyavu on 3 July, 2023 Madanagiriappa and 3 others [(2008) 4 MLJ 781] and held that based on mere revenue records, serious partition suits relating to respective rights of parties of Hindu families, cannot be decided in favour of a person on the sole ground that patta stands in the name of such person. In the considered opinion of the Court, the ratio laid down in the said decision squarely applies to the facts of this case and except marking revenue records, namely Exs.B1 to B10, no other tenable evidence has been produced to sustain the case of the defendants.*

**Nallamuthu Gounder and others -vs Balakrishnamurthy and others decided by Hon'ble High court of Madras in A.S.No.516 of 2006 dated 02.02.2023 as follows,**

*"12.Since the only defence raised by the appellants is that there was a oral partition between the three brothers in the 1 st week of January, 1975, this Court has to examine the evidence. Though it is admitted that there was mutation in Revenue records sub-division in respect of some of the properties, the mutation of names cannot be a conclusive evidence of oral partition. In the present case, the plaintiffs admit that there was mutation of names in respect of some of the properties based on enjoyment. There is no document produced before this Court to prove that there was mutation in respect of the entire suit properties. The law is well settled that mutation of Revenue records alone will not prove oral partition. It is to be seen that the appellants have not produced any Revenue proceedings acknowledging the oral partition or a statement or acknowledgment of any other members of family about partition before Revenue officials. If mutation had taken place on any joint application or on the individual application admitting oral partition, it may be relevant to the Court to decide whether there was a oral partition or not. In the present case, except kist receipts, no other document is produced by the appellants to prove that there was already a oral partition. Under Tamil Nadu Patta Pass Book Act, 1983, the Revenue authorities can deal with modification of Revenue records either by reason of death of any person or by a reason of transfer of interest in the land or*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:22 +0530

*by reason of any other subsequent change in circumstances. In the present case, this Court finds no evidence to show that the mutation was by reporting transfer of interest by way of such oral partition."*

மேற்கண்ட முன்தீர்ப்புக்களின் அடிப்படையில், ஒரு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டபோது, யார் முன்னிலையில்?, எந்தத் தேதியில்?, எப்போது ஏற்படுத்தப்பட்டது? என்பது குறித்து விளக்கப்படவேண்டும். அதேபோல், அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் யார், யாருக்கு? எவ்வளவு சொத்துக்கள் கிடைத்தது? என்பது குறித்தும் விளக்கப்படவேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து, ஏதேனும் ஆவணங்கள் அதன்பின்பு அந்த நபர்கள் பெயர்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்தும் விளக்கப்படவேண்டும். அவ்வாறு சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினையில் பிரிக்கப்பட்ட பின்பு, அந்தச் சொத்துக்களைப் பொறுத்து, மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் தனித்தனியாக ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்களில் பதிவுகள் ஏற்பட்டிருக்கவேண்டும். மேலும், வாய்மொழி பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களைப் பொறுத்து, அதைப் பெற்ற நபர், தனியாக அவர் பெயரில் வரியோ அல்லது தீர்வையோ செலுத்தி வந்திருக்கவேண்டும் அல்லது அந்தச் சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்திருக்கவேண்டும். அவ்வாறான விளக்கங்களின் அடிப்படையில், வாய்மொழி பாகப்பிரிவினையை சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நீதிமன்றத்தின் முன்பு எடுத்துரைக்கப்படலாம்.

19. ஆனால், இந்த வழக்கினைப் பொறுத்து, 1ஆம் பிரதிவாதி பெயரில் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை. 1ஆம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்துக்களானது வாய்மொழி பாகப்பிரிவினையில் கிடைத்ததாகக் கூறும் நிலையில், அதன்பிறகு அந்தச் சொத்தை அவர் அனுபவம் செய்து வந்ததற்கு வருவாய்த்துறை ஆவணங்களிலோ அல்லது வேறு ஆவணங்களிலோ பதிவுகள் எதுவும் இல்லாத நிலையில், வழக்குச் சொத்தானது 1ஆம் பிரதிவாதிக்கு, கிருஷ்ணன்–திருமலையம்மாள் தம்பதியினர் வாய்மொழியாக பாகம்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:27 +0530

செய்து ஒப்படைத்தனர் எனக் கூறுவது பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. இந்நிலையில், இந்த வழக்கைப் பொறுத்து வாதிகள் கோரியபடி பாகம் கிடைக்கத்தக்கதா? எனப் பார்க்கும்போது, இந்த 1 ஆம் வாதி, இறந்துபோன கிருஷ்ணனின் மகனான கோபாலின் முதல் மனைவி எனக் கூறப்பட்டுள்ளது. இந்த 2 ஆம் வாதி, கோபாலின் 2 ஆம் மனைவி என்றும், 3 ஆம் வாதி, 2 ஆம் வாதிக்கும் கோபாலுக்கும் பிறந்த மகன் என்றும் கூறப்பட்டுள்ளது. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே, மேற்படி கோபால் இரண்டாம் திருமணம் செய்துள்ளதால், அந்தத் திருமணம் செல்லாத திருமணமாகும். அவ்வாறு இரண்டாவது திருமணம் மூலம் பிறந்த 3 ஆம் வாதி மட்டுமே கோபாலுக்கு சட்டப்படியான வாரிசாக கருதப்படுவார். மேலும், இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி, கோபாலின் இரண்டாம் மனைவியான 2 ஆம் வாதி, அவரின் சட்டப்படியான வாரிசு இல்லை. ஆனால், இந்த வழக்கைப் பொறுத்து, கிருஷ்ணன்–திருமலையம்மாளின் மகளான கருப்பம்மாள் என்றும், அந்த கருப்பம்மாளின் மகள் 2 ஆம் வாதி எனக் கூறப்பட்டுள்ள நிலையில், தனது தாயாருக்கு வழக்குச் சொத்துக்களில் கிடைக்கக்கூடிய பாகத்தில் ஒரு பாகம் தனக்கு கொடுக்கப்படவேண்டுமென 2 ஆம் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், அந்த கருப்பம்மாளுக்கு, மாணிக்கம், 2 ஆம் வாதி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் வாரிசுகள் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த மாணிக்கம் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை பற்றி வழக்குரையில் கூறப்பட்ட சங்கதிகளைப் பொறுத்து பரிசீலனை செய்யும்போது, அந்த ஆறுமுகம் என்பவர் கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பே காணாமல் போய்விட்டதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், இளைய சகோதரி மாணிக்கம் 1.1/2 வயது குழந்தையாக இருந்தபோது, பராமரிக்க ஆள் இல்லாததால் ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டு, வெளியூரில் வசித்து வருவதாகவும், அவர்கள் கோரினால் வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினையில் பாகம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:32 +0530

21. இதுசம்பந்தமாக, வா.சா.1 டம் குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பப்பட்டபோது, அதற்கு கீழ்க்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

> *"கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், மாணிக்கம் மற்றும் நான் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ஆறுமுகம், மாணிக்கம் தற்போதும் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்."*

வழக்குரையில் கூறியுள்ளபடி ஆறுமுகம் காணாமல் போய்விட்ட பிறகு எவ்வாறு உயிருடன் உள்ளார் என்பது குறித்து 2 ஆம் வாதிக்கு எவ்வாறு தெரிந்தது என்பது தெரியவில்லை. அதேபோல், மாணிக்கம் 1.1/2 வயது குழந்தையாக இருக்கும்போது ஆசிரமத்தில் சேர்க்கப்பட்ட பின்னர், அவரது நிலை குறித்து தங்களுக்கு தெரியாது என வழக்குரையில் கூறிவிட்டு, தற்போது குறுக்கு விசாரணையில் உயிருடன் இருப்பதாகக் கூறியுள்ளார். இவ்வாறு வாதிகளின் வழக்குரைக்கும், சாட்சியத்திற்கும் முரண்பாடாக உள்ளது. இவ்வாறு கருப்பம்மாளின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படும் நிலையில், அந்த மாணிக்கம் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களைப் பற்றி வழக்குரையில் அவர்கள் இருக்கும் இடம் தெரியாது எனக் கூறிவிட்டு, தற்போது சாட்சியத்தில் அவர்கள் உயிருடன் இரப்பதாக குறிப்பிட்டு வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். அவ்வாறு உயிருடன் இருக்கும் விபரத்தை தெரிந்துகொண்டே வாதிகள், அதை மறைத்து இந்த வழக்கை பாகம் கோரி தாக்கல் செய்துள்ளனர். பாகப்பிரிவினை வழக்குகளைப் பொறுத்து, அனைத்து வாரிசுகளும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட பின்னரே முடிவு செய்ய இயலும். இந்த வழக்கைப் பொறுத்து, அந்த ஆறுமுகம் மற்றும் மாணிக்கம் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கருதுகிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:37 +0530

22. மேலும், இந்த வழக்கில் 1ஆம் வாதி, இறந்துபோன கோபாலின் வாரிசு என்ற முறையில் கோபாலின் பாகத்தில் 1ஆம் வாதிக்கும் பாகம் உள்ளது. அதேபோல், கோபாலின் இரண்டாம் மனைவி மூலம் பிறந்த 3ஆம் வாதிக்கும் வழக்குச் சொத்தில் பாகம் உள்ளது. இவ்வாறு 1, 3 வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் பாகம் உள்ள நிலையில், ஆனால் இதைப் பொறுத்து வாதிகள் கோரிய மூன்றில் இரண்டு பாகத்தைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தேவையான தரப்பினர்களை சேர்க்கப்படாததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இதில் பிரதிவாதிகளுக்கு முழுமையாக பாகம் உள்ளதா? எனப் பார்க்கும்போது, இதில் வழக்குச் சொத்துக்களானது 1ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்பட்டதாக எடுத்துரைக்கப்படாத நிலையில், அதைப் பொறுத்து கோபால் மற்றும் கருப்பம்மாளின் பாகத்தையும் சேர்த்து, 1ஆம் பிரதிவாதி, 2ஆம் பிரதிவாதிக்கும், 2ஆம் பிரதிவாதி, 3ஆம் பிரதிவாதிக்கும் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் எதுவும் அவர்களின் பாகத்தைப் பொறுத்து ஏற்புடையதல்ல. மேலும், இந்த வழக்கானது, வாதிகள் தரப்பில், 1, 3 வாதிகளுக்கு கோபாலின் பாகத்திலும், 2ஆம் வாதிக்கு அவரது தாயார் கருப்பம்மாளின் பாகத்திலும் ஒரு பாகம் உள்ள நிலையில், கருப்பம்மாளின் மற்றொரு வாரிசுகளான ஆறுமுகம், மாணிக்கம் ஆகியோர்களை சேர்க்கப்படாததால், இந்த வழக்கைப் பொறுத்து முழுமையாக முடிவு செய்ய இயலாது என்பதால், இந்த வழக்கில் வாதிகள் கோரியபடி எந்தவித பாகமும் தற்போதைய நிலையில் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இவ்வழக்கெழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

23. <u>எழுவினா எண்கள்.3 மற்றும் 4–க்கான தீர்வு</u>

ஏற்கனவே மேலே எழுவினா எண்கள்.1 மற்றும் 2–ஐ பொறுத்து, வாதிகள் கோரிய எப்பரிகாரமும் தற்போதைய நிலையில் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்பட்டுள்ளதால், செலவுத்தொகை உட்பட வேறு எந்தப் பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தரப்பினர்கள்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:42 +0530

அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்கவேண்டுமென்றும் இவ்வெழுவினாவுக்கு முடிவு காணப்படுகிறது.

24. இறுதியாக, வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்கள் அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் கணிணியில் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் தேதியன்று திறந்த வழக்கரங்கில் அவையறிய பகரப்பட்டது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:48 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி.**
**(முழு கூடுதல் பொறுப்பு)**

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :—**

வா.சா. 1 திருமதி. செல்வி (2 ஆம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :—**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | — | தரப்பினர்களின் குடும்ப கொடிவழி பட்டியல் |
| வா.சா.ஆ.2 | 09.02.2021 | பதிவு தான செட்டில்மெண்டு ஆவண எண்.680/2021—ன் அசல் |
| வா.சா.ஆ.3 | 04.10.2021 | பதிவு தான செட்டில்மெண்டு ஆவண எண்.3776/2021—ன் அசல் |
| வா.சா.ஆ.4 | 31.01.2022 | வாதிகள், வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | — | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் — 2 எண்ணங்கள் |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:52 +0530

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:–**

| | | |
|---|---|---|
| பி.சா.1 | திருமதி. இசக்கியம்மாள் | (1 ஆம் பிரதிவாதி) |
| பி.சா.2 | திருமதி. பானுமதி | (3 ஆம் பிரதிவாதி) |
| பி.சா.3 | திருமதி. புணகர்த்தா | |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

பி.சா.ஆ.1 – தரப்பினர்களின் குடும்ப கொடிவழி பட்டியல்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.17 21:22:58 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி.**
**(முழு கூடுதல் பொறுப்பு)**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**அசல் வழக்கு எண்.233/2022**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 17.04.2026**